# சிற்றிலக்கியங்கள் (20U2LT2)

முனைவர் ச. பார்வதி
உதவிப்பேராசிரியர்,
தமிழாய்வுத்துறை,
ஜமால் முகமது கல்லூரி,
திருச்சிராப்பள்ளி – 620 020.

இளங்கலை முதலாமாண்டு மாணவருக்குரிய **மொழிப்பாடத்தில் அலகு 5 – தமிழ் இலக்கிய வரலாறு** என்ற பிரிவில் இடம் பெற்றுள்ள **சிற்றிலக்கியங்கள்** என்ற பகுதியை தேர்வு நோக்கில் மாணவர்கள் எழுதுவதற்கு எளிதாகவும் புரியும்படி அமைத்திருக்கிறேன்.

**சிற்றிலக்கியம் என்றால் என்ன?**

- அளவில் (பாடல் எண்ணிக்கை அல்லது அடிகளின் எண்ணிக்கை) சுருங்கியதாக அமைவது.
- அகப்பொருள் அல்லது புறப்பொருளில் ஏதேனும் ஒரு துறையைப் பற்றியதாக அமையும்.
- அறம், பொருள், இன்பம், வீடு எனும் நான்கு உறுதிப் பொருள்களுள் ஏதேனும் ஒன்றைத் தருவதாக அமைவது.
- பாடப்பெறும் கடவுள் அல்லது மன்னன் அல்லது வள்ளல் ஆகியோருடைய வாழ்வின் ஒரு சிறு கூறு மட்டுமே விளக்கப்பட்டிருக்கும்.

**சிற்றிலக்கியக் காலம்**

- கி.பி 1350 – 1750
- பல்லவர் காலத்தைப் பக்தி இலக்கிய காலம் என்றும் இடைக்காலச் சோழர் காலத்தைக் காப்பிய காலம் என்றும் கி.பி. 1350 முதல் தமிழகத்தை ஆட்சி செய்த **நாயக்கர் காலத்தைச் சிற்றிலக்கிய காலம்** என்று கூறலாம்.
- நாயக்கத் ஆட்சிக் காலத்தில் பள்ளு, உலா, தூது, கலம்பகம் முதலிய சிறுபிரபந்தங்களும், கோயில்களைப் பற்றிய சிறுசிறு தலபுராணங்களும் தோன்றின.
- சிற்றிலக்கிய வகை மேலோங்கிய காலமாக கி.பி.12ம் நூற்றாண்டிலிருந்து கி.பி.17ம் நூற்றாண்டு வரையிலான காலத்தைக் குறிப்பிடலாம்.
- பிரபந்தம் - வடமொழிச் சொல்லுக்கு 'நன்கு கட்டப்பட்டது', 'நன்கு யாக்கப்பட்டது' என்பது பொருளாகும்.
- பிரபந்தங்கள் எனப்பெறும் சிறுஇலக்கியங்கள் 96 ஆகும்.
- வீரமாமுனிவர் **சதுரகராதி** எனும் நூலில் பிரபந்தம் **96** வகை என்று குறிப்பிடுகிறார்.
- பிரந்த மரபியல் " பிள்ளைக் கவிமுதல் புராணம் ஈறாகத் தொண்ணூற்றாறு என்னும் தொகையாம்" என 96 வகைச் சிற்றிலக்கியங்களைக் குறிப்பிடுகிறது.

சிற்றிலக்கியப் பிரிவு

அகம் புறம் பக்தி

**தலைமைத்தன்மை வாய்ந்தவை:**

96 வகை சிற்றிலக்கியங்களில் தலைமைத்தன்மை வாய்ந்தனவாக:

1. அந்தாதி
2. கோவை
3. உலா
4. கலம்பகம்
5. சதகம்
6. பரணி
7. பிள்ளைத்தமிழ்
8. தூது
9. பள்ளு
10. குறவஞ்சி

**1. அந்தாதி**

அந்தாதி என்பதை அந்தம் + ஆதி எனப் பிரிக்கலாம். அந்தம் என்றால் முடிவு, ஆதி என்றால் முதல். அந்தம் ஆதியாக வருவதால் அந்தாதி எனப் பெயர் பெற்றது.

ஒரு பாடலின் இறுதியில் உள்ள **எழுத்து, அசை, சொல், சீர், அடி** யாதேனும் ஒன்று அடுத்த பாடலின் முதலில் வருமாறு அமைத்துப் பாடுவது அந்தாதி எனப்படும்.

பதிற்றந்தாதி, நூற்றந்தாதி, ஒலியந்தாதி, கலை அந்தாதி, யகம அந்தாதி, நீரோட்டயகம அந்தாதி எனப் பலவகைப் பெறுகிறது.

**நூல்கள்**

- **முதல் அல்லது ஆதி அந்தாதி – காரைக்காலம்மையார் - அற்புதத் திருவந்தாதி**
- அபிராமி பட்டர் - அபிராமி அந்தாதி (அபிராமி இறைவி)
- கம்பர் - சடகோபரந்தாதி
- நக்கீரர் - கயிலை பாதி காளத்தி பாதி அந்தாதி

**2. கோவை**

அகப்பொருள் இலக்கணத்திற்குரிய துறைகள் வரிசையில் அமையும்படி கோர்த்துப் பாடுவது கோவை.

தொல்காப்பியப் பொருளதிகாரத்திலுள்ள களவு, கற்பு எனும் பகுதிகளே கோவை **நூல்கட்கு அடிப்படையாகும்.**

**பாடுபொருள்** : - ஒத்த தலைவனும் தலைவியும் தெய்வத்தாலும் ஊழ்வினையாலும் ஏற்படும் சந்திப்பில் அன்பு கொண்டு பின்னா் திருமண நிலைக்குச் செல்லும் நிகழ்வுகளை விளக்குவது. இதனை அகப்பொருட்கோவை என்றும் ஐந்திணைக்கோவை என்றும் அழைப்பா்.

**நூல்கள்**

- **முதல் அல்லது ஆதி கோவை : பாண்டியன் நெடுமாறன் - பாண்டிக்கோவை**
- **மாணிக்கவாசகா் - திருக்கோவையாா்**
- மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளை – சீா்காழிக்கோவை
- திரிகூடராசப்பக் கவிராயா் - குற்றாலக்கோவை
- ஒட்டக்கூத்தா் - குலோத்துங்கன் கோவை

3. உலா

பாட்டுடைத் தலைவன் வீதியில் உலா வருங்கால் அவனைக் கண்டு பேதை, பெதும்பை, மங்கை, மடந்தை, அரிவை, தெரிவை, பேரிளம்பெண் எனும் எழு பருவ மகளிரும் காதல் கொண்டு மயங்கி வாடுவதாகக் கலிவெண்பா அமைப்பில் பாடுவது உலா.

**வேறு பெயா்** : உலாப்புறம், பவனி உலா, உலாமாலை, புற உலா

**சிறப்பித்துப் பாடப்படுபவை (10)** : பாட்டுடைத்தலைவன் சிறப்பினைக் கூறுங்கால், மலை, நதி, நாடு, ஊா், தாா் (மாலை), பரி(குதிரை), கரி (யானை), கொடி, கோல்

**உலா இலக்கியங்கள்**

| முற்பகுதி | பிற்பகுதி |
|---|---|
| குடிநெறி | எழுபருவ மகளிா் விளையாட்டு |
| நீதிமுறை | தலைவனைக் கண்டு காதல் கொள்ளல் |
| மரபு | |
| கொடை | |
| நீராடல் | |
| அணி அணிதல் | |
| நகா் வரவேற்பு | |
| களிறு முதலியன ஊா்ந்து வருதல் | |

**நூல்கள்**

1. **சேரமான் பெருமாள் நாயகனார் - திருக்கைலாய ஞான உலா. தமிழில் தோன்றிய முதல் உலா அல்லது ஆதி உலா என்று அழைக்கப்படுகிறது.**

2. ஒட்டக்கூத்தர் - மூவருலா (விக்ரம சோழன் உலா, குலேத்துங்க சோழன் உலா, இராசராசன் சோழன் உலா)

3. இரட்டைப் புலவர்கள் - ஏகாம்பர நாதர் உலா

4. திரிகூடராசப்பக் கவிராயர் - திருக்குற்றால நாதர் உலா

**4. கலம்பகம்**

பல வகையான செய்யுட்களையும் பல்வகை உறுப்புக்களையும் அகப்பொருள் புறப்பொருள்களையும் விரவி அமையும் இலக்கியத்தைக் கலம்பகம் என்பர்.

கலம்பகம் என்னும் சொல்லுக்குக் கலவை என்பது பொருள்.

கலப்பு + அகம், கலம்பு + அகம் - கலம்பகம் எனப் பிரிக்கலாம். பிற்காலத்தில் கலம்பகம் என்றச் சொல் கதம்பம் என மருவி வழங்குகிறது.

**கலம்பக உறுப்புகள்**

கலம் பகம் எனப் பிரித்துக் கலம் 12 பகம் 6 எனக் கொண்டு 18 பொருள் உறுப்புகளை உடையதாகும்.

**அகப்பொருள் உறுப்புக்கள்** : அம்மானை, ஊசல், காலம், வண்டு, மேகம், கைக்கிளை, பாண், தழை, இரங்கல், குறம், தூது

**புறப்பொருள் உறுப்புக்கள்:** களி, மறம், புயம் போன்றவை.

**நூல்கள்:**

1. **முதன்முதலில் தோன்றிய கலம்பகம் நந்திக்கலம்பகம்.** இது மூன்றாம் நந்திவர்மன் மீது பாடப்பட்டது. தமிழுக்காக நந்திவர்மன் உயிர் துறந்தான் என்பர். "நந்திக்கலம்பகத்தால் மாண்டகதை நாடறியும்" என்றும் வரும் அடிகள் சிறப்பித்துக் கூறும்.

2. குமரகுருபரர் - மதுரைக் கலம்பகம்

3. பிள்ளைப்பெருமாள் ஐயங்கார் - திருவரங்கக் கலம்பகம், திருவணைக் கலம்பகம், கச்சிக்கலம்பகம்

4. வீரமாமுனிவர் - திருக்காவலூர்க் கலம்பகம்

5. சதகம்

சதம் என்னும் வடசொல்லுக்கு நூறென்பது பொருளாகும். தமிழில் நூறு பாடல்கள் கொண்டதாகச் சதக இலக்கியங்கள் திகழ்கின்றன.

நீதிக் களஞ்சியமாகவும், வரலாற்றுக் கருவூரமாகவும், செய்திப்பெட்டகமாகவும், கருத்துச் சுரங்கமாகவும் விளங்குகிறது.

சதங்கள் - பழமொழிகள், பழங்கதைகள், நீதிகள், சோதிடக் கருத்துக்கள் ஆகியவற்றை சொல்லுகிறது.

மண்டலமே, தேவனே, குமரேசனே என முடியும்

தெய்வம், வள்ளல், சான்றோர் பெயரில் அமையும்

**முதல் சதகம் - மாணிக்கவாசகரின் திருச்சதகம்**

**வகைகள்:**

1. பக்தி சதகங்கள்
2. வாழ்வியல் சதகங்கள்
3. வரலாற்றுச் சதகங்கள்
4. மருத்துவச் சதகங்கள்

என பலவகையாகத் திகழ்கின்றன.

6. பரணி

போர்க்கள வெற்றியைப் புகழ்ந்து பாடுவதே பரணியாகும்.

**பரணி என்பதன் பெயர்க்காரணம்:**

1. பரண் மேலிருந்து பறவைகளை விரட்டுதல்
2. பரண் மீது இருந்து பறவை விரட்டிப் பாடுதல் போலப் போர்க்களத்தில் பகைவரை விரட்டிய திறம் பாடுவது.
3. மாற்றார் படை வெல்லப்பட்ட போர்க்களத்தில் பரணிநாள் அன்று பேய்கள் குருதி முதலியன கூழ் அட்டு உண்ணுதலைத் தெரிவிப்பது.

**பரணி உறுப்புக்கள்:**

தேவர் வாழ்த்து, கடைநிலை, பாலை, காளிகோயில், காளி ஏத்தல், அலகை விரோதம், கனாநிலை, நிமித்தம், பசி, பெருந்தேவிபீடம் அழகுற இருக்க அமர்நிலை நிமித்தம், அவள்பதம் பழிச்சுதல், மன்னன் வாகைமாலை மரபு உரைத்தல், மறக்களம் காண்டல், களத்திடை அடுகூழ் வார்த்தல், பரவுதல் ஆகியவையாகும்.

பரணி நோக்கம்:

போரில் தோற்றாரின் பெயரையே தன் பெயராகக் கொள்ளும். எனினும் வென்ற மன்னனைப் புகழ்தே நோக்கமாகும். கலிங்கத்துப்பரணி, தக்கயாகப் பரணி, பாசவதைப் பரணி, இரணியவதைப் பரணி முதலியவற்றின் பெயர்கள் அவ்வாறே அமைந்திருக்கிறது.

நூல்:

**முதன்முதலில் தோன்றிய நூல் கலிங்கத்துப் பரணி.** இந்நூல் முதலாம் குலோத்துங்க சோழனுக்கும் அனந்தவர்ம கோடகங்கன் என்னும் கலிங்க மன்னனுக்கும் இடையே நடந்த போரில் சோழன் வெற்றி கொண்டமையனைச் சிறப்பித்துப் பேசுகிறது.

**கலிங்கத்துப்பரணி –** கடவுள் வாழ்த்து, கடைதிறப்ப, காடு பாடியது, கோயில் பாடியது, தேவியைப் பாடியது, இந்திரசாலம், மன்னன் மரபுரைத்தல், பேய் முறைப்பாடு, அவதாரம், காளிக்குக் கூளி கூறியது, போர் பாடியது, களம் பாடியது, கூழ்அடுதல் அகிய 13 உறுப்புக்களைப் பெற்றுள்ளது.

7. பிள்ளைத்தமிழ்

- 3ஆம் திங்களில் தொடங்கி 21ஆம் திங்கள் வரை பருவத்துக்கு 2 திங்களாகக் கொண்டு பிள்ளைத்தமிழ் பாடப்பெறும். ஒரு பருவத்துக்குப் பத்துப் பாடல்கள் எனப் பத்துப் பருவத்துக்கும் சேர்த்து நூறு பாடல்கள் பிள்ளைத்தமிழில் இடம்பெறுகின்றன.
- வேறு பெயர்கள் : பிள்ளைப்பாட்டு, பிள்ளைக்கவி
- **பிள்ளைத்தமிழ் இலக்கியத்தின் முன்னோடிகள்** :

    1. கண்ணனைக் குழந்தையாக எண்ணிப் பலவாறாகப் பாடிய பெரியாழ்வார்
    2. இராமனைக் குழந்தையாக எண்ணிப் பாடிய குலசேகராழ்வார்.

**பிள்ளைத்தமிழ் பிரிவுகள்** : ஆண்பாற் பிள்ளைத்தமிழ், பெண்பாற் பிள்ளைத்தமிழ் என இருவகைப்படும்.

- **ஆண்பாற் பிள்ளைத்தமிழ்** : காப்பு, செங்கீரை, தால், சப்பாணி, முத்தம், வருகை, அம்புலி, சிற்றில் சிதைத்தல், சிறுபறை, சிறுதேர்.
- **பெண்பாற் பிள்ளைத்தமிழ்** : காப்பு, செங்கீரை, தால், சப்பாணி, முத்தம், வருகை, அம்புலி, கழங்கு அல்லது நீராடல், அம்மானை, ஊசல்.

நூல்கள்:

- **முதலில் தோன்றிய முழுமையான பிள்ளைத்தமிழ் : ஒட்டக்கூத்தர் - குலோத்துங்கன் பிள்ளைத்தமிழ்**
- சிவஞான சுவாமிகள் - அமுதாம்பிகை பிள்ளைத்தமிழ்

- பகழிக் கூத்தர் - திருச்செந்தூர் முருகன் பிள்ளைத்தமிழ்
- மீனாட்சி சுந்தரம்பிள்ளை – சேக்கிழார் பிள்ளைத்தமிழ்

8. தூது

ஒருவருக்குத் தன் கருத்தையோ, உணர்வையோ தெரியப்படுத்த மற்றொருவரைத் தம் சார்பாகச் சொல்லி அனுப்புதல் தூது எனப்படும்.

தூது செல்வோர் உயர்திணையாகவன்றி அஃறிணையாகவும் இருக்கலாம். கலிவெண்பாக்களால் பாடப்படும்.

வகைகள்:

அகத்தூது, புறத்தூது

அகப்பொருளில் காதல் தூது, புறப்பொருளில் அரசர் விடுதூது என இருந்த நிலை மாறி, நண்பர் விடுதூது, பகைவர்க்க விடுதூது எனத் தூது இலக்கியம் பல்கிப் பெருகிற்று.

தூது அனுப்பியவை:

பெருங்கதை – உதயணன் வாசவதத்தையிடம் மானை அனுப்புதல்

நளவெண்பா – நளன் தமந்திபால் அன்னத்தை அனுப்புதல்

இராமாயணம் - இராமன் இராவணிடம் அங்கதனை அனுப்புதல்

பாரதம் - பாண்டவர் துரியோதானிடம் கண்ணனை அனுப்புதல்

அகத்தூது

தலைவி தலைவனிடம் தூது அனுப்புதலே தொடர்ந்து வரும் வழக்கமாக உள்ளது.

நூல்கள்:

1. உமாபதி சிவாச்சாரியார் - நெஞ்சுவிடுதூது (முதல் தூது)
2. பல பட்டடைச் சொக்கநாதப் புலவர் - அழகர் கிள்ளை விடுதூது
3. கச்சியப்ப முனிவர் - வண்டு விடுதூது
4. வெள்ளை வாரணர் - காக்கை விடுதூது ஆகியன சிறந்த தூது நூல்களும்

புறத்தூது

தொல்காப்பியர் ஓதல், பகை, தூது, பரிவு எனக் கூறுங்கால் வரும் தூது புறத்தூது.

புறநானூற்றில் ஔவையார் அதியன் வேண்டுகோட்படி தொண்டைமானிடம் தூது சென்றார்.

பிற்கால வழக்கம்

பணம், துகில், சவ்வாது, நெல், விறலி, தமிழ், புகையிலை, பொன், கழுதை, காக்கை, ரயில், ராக்கெட், செருப்பு எனப் பல பொருட்களையும் தூது விடுத்துப் பாடியமை பிற்கால வழக்கமாகும்.

புகையிலை – நண்பனிடம்

கழுதை, செருப்பு – பகையிடம்

தற்போது 80க்கும் மேற்பட்ட தூது நூல்கள் உள்ளன.

9. பள்ளு

- பன்னிருபாட்டியலில் கூறப்படும் உழத்திபாட்டு பிற்காலத்தில் பள்ளு இலக்கியமாக வளர்ந்தது.
- **வேறு பெயர்** : பள்ளேசல், பள்ளு நாடகம்.
- பள்ளர்களாகிய பள்ளன், இளையபள்ளி, மூத்தபள்ளி ஆகியோர் செயல்களையே பெரிதும் குறிப்பிடும் நூல் பள்ளு எனப்பட்டது.
- “நெல்லு வகையை எண்ணினாலும் பள்ளு வகையை எண்ண முடியாது” என்ற பழமொழி, பள்ளு இலக்கியத்தின் மிகுதியினைக் காட்டும்.

**பள்ளு நூற்கள்** :

திருவாரூர்ப் பள்ளு, திருச்செந்தூர்ப் பள்ளு, வைசியப் பள்ளு, வையாபுரிப் பள்ளு, குதிரை மலைப் பள்ளு ஆகியவை குறிப்பிடத்தக்கவையாகும்.

- **முதல் பள்ளு இலக்கியம்** : முக்கூடற்பள்ளு
- **முக்கூடற்பள்ளின் பாடுபொருள்** - கடவுள் வாழ்த்து, பள்ளன் பள்ளியர் வாழ்க்கை, இரு பள்ளியரின் சமயப்பூசல், பூசல்மாறி ஒற்றுமையோடு வாழும் பள்ளியர் நிலை, அடிமைப்பட்ட பள்ளனின் வாழ்வு, ஆணவமிக்க பண்ணையாரின் போக்கு, நெல்வித்த வகைகள், மாட்டு வகைகள், உழவுக் கருவி வகைகள்.

10. குறவஞ்சி

பன்னிருபாட்டியல் கூறும் குறத்திப் பாட்டே பிற்காலத்தில் குறவஞ்சி இலக்கியங்களாக உருப்பெற்றன.

**வேறு பெயர்** : குறவஞ்சி நாடகம், குறவஞ்சி நாட்டியம்

இயல், இசை, நாடகம் என்ற முத்தமிழும் ஒருங்கே கொண்டிருப்பது குறவஞ்சி.

உலாவரும் தலைவனைக் கண்டு தலைவி காதல் கொள்ளுதல், அவள் திங்கள், தென்றல் போன்றவற்றைப் பழித்தல், குறத்தி வருதல், குறத்தி மலைவளம் கூறல், தலைவியின் கைபார்த்துக் குறி சொல்லுதல், விரும்பிய தலைவனைத் தலைவி அடைவாள் எனல், பரிசு

பெற்று வரும் குறத்தியைக் குறவன் எதிர்ப்படல், அணிகண்டு ஐயுற்றுக் குறவன் வினாதல், குறத்தி விடை முதலிய செய்திகள் நிரல்படக் குறவஞ்சியில் இடம் பெறுகின்றன.

குறத்தியின் செயலே இவ்விலக்கியத்தில் மேம்பாடு பெறுவதால் குறவஞ்சி எனப்பட்டது.

பேச்சு மொழிக் கலப்பும் குறவரின் வழக்கு மொழியும் இலக்கியத்தில் பரவலாகக் காணப்படுகின்றன.

பாட்டுடைத் தலைவனின் பெயராலோ அவன் ஊர்ப் பெயராலோ **குறவஞ்சியின் பெயர்** உருவாக்கப்பட்டிருக்கும்.

**முதல் குறவஞ்சி : திருக்குற்றாலக் குறவஞ்சி – திரிகூடராசப்ப கவிராயர்.**

**பிற நூற்கள் :**

அழகர் குறவஞ்சி, திருவாரூர்க் குறவஞ்சி, விராலிமலைக் குறவஞ்சி, வரத நஞ்சப்ப பிள்ளையின் தமிழரசி குறவஞ்சி, திருச்செங்கோட்டுக் குறவஞ்சி.

**காலந்தோறும் சிற்றிலக்கியங்கள் பெருகிக் கொண்டே வருகின்றது. அவைக்கால மக்களின் பழக்கவழக்கங்கள், பண்பாடு, மொழி போன்றவற்றை எடுத்துக்காட்டுகின்றன.**